மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககம்,

சென்னை – 06.

16.05.2022

## செய்திக் குறிப்பு

குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009, சட்டப்பிரிவு 12(1)(சி)இன்படி 2022 – 2023 ஆம் கல்வியாண்டிற்கு 25 % இட ஒதுக்கீட்டின் கீழ் வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த பிரிவினரின் குழந்தைகளுக்கு சிறுபான்மையற்ற தனியார் சுயநிதிப் பள்ளிகளில் நுழைவுநிலை வகுப்பில் (எல்.கே. ஜி. அல்லது முதல் வகுப்பு) அதாவது பள்ளி எந்த வகுப்பில் ஆரம்பிக்கிறதோ அந்த வகுப்பில் சேர்க்கைக்கு **20.04.2022** முதல் **18.05.2022** வரை **rte.tnschools.gov.in** என்ற இணையதளம் மூலம் விண்ணப்பிக்க வழிவகை செய்யப்பட்டிருந்தது.

குழந்தைகளின் நலனை கருத்தில் கொண்டு, மேற்காண் திட்டத்தின் மூலம் விண்ணப்பிக்க **19.05.2022 முதல் 25.05.2022 வரை காலஅவகாசம் வழங்கப்படுகிறது.**

16/5/2022

மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநர்